பிஸ்மில்லாஹி.

நாகூர்

# யூசுபிய்யா மாலை

இஃது

நாகூர் மகா ா-ஸ்ரீ மு. ஆக்கிம்சாகிபு நகுதா
அவர்கள் குமாரர்
முகியித்தீனப்துல்காதிறுப் புலவர்
இயற்றியது.

---

நாகபட்டணம் மகா-ா-ஸ்ரீ
பக்கிர்சாகிபு சராங்கு அவர்கள் குமாரரும்,
மஜூராக்கம்பனி டெலிவரி கண்டிறாக்டரும்,
சராங்குமாகிய மகா-ா-ஸ்ரீ
சேகு அவர்களின் பொருளுதவியால்

---

நாகபட்டணம்
நீலலோசனி அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

---

1918.

Q7:417
N18

பிஸ்மில்லாஹி,

நாகூர்

# யூசுபிய்யாமாலை.

இஃது

நாகூர் மகா-ா-ஸ்ரீ மு. ஆக்கிம்சாகிபு நகுதா

அவர்கள் குமாரர்

மூகியித்தீனப்துல் காதிறுப் புலவர்

இயற்றியது.

748
1918/IV

---

நாகபட்டணம்

மகா-ா-ஸ்ரீ பக்கிர் சாகிபு சிறுங்கு அவர்கள் குமாரரும்

மஜ-ாருக்கம்பனி டெலிவரி கன்ட்ராக்டரும் சிறுங்குமாகிய

மகா-ா-ஸ்ரீ சேகு அவர்களின் பொருளுதவியால்

——:o:——

நாகபட்டணம்

நீலலோசனி அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

---

1918.

## இந்நூலை யச்சிட்டரங்கேற்றியவர் இன்னாரெனப்பாடியது

---

### வெண்பா.

தொல்லுலகில் யூசுபிய்யா மாலை துலங்குதற்கு
நல்லபடி யச்சேற்றி நல்கின—சொல்லழகன்
முக்காலுங் கூறுகின்றேன் மூதறிஞன் சேகுமன்னன்
எக்காலும் வாழ்க விசைந்து

இந்நூலாசிரியர் சகோதரரும், சித்திரகவி நாவலருமாகிய

## ஸ்ரீலஸ்ரீ மு. ஆ. சுல்தான் மரைக்காயர் அவர்கள் இயற்றிய சிறப்புப்பாயிரம்.

### அகவல்.

விரிதலை யுலகும் வேள்விசும் பனைத்து
மொ நதனிச் சொல்லா லுஞற்றிய வல்லவன்
மளுஹருல் அத்தம்மாய் மாண்மிய பொருளா
யுலகுயி ரெவைக்கு முள்ளொளிக் கருவாய்
வருநபி யிறசூற்றிரு மகண் மரபிற்
றிருவள ராக்கஞ் சிறக்க வந்திசுலா
மார்க்கஞ் சிறப்ப வன்மையம் பொருட்டம்
தீர்க்கஞ் சிறப்பத் திருபகு தாதமர்
செய்யிது முஹியித்தீன் செம்மலெம் மாண்டகை
துய்யநல் வழியினிற் றுகளுர் மதியமாய்
கல்வியும் ஞானமுங் கவின்றரு மோனமுஞ்
செல்வமும் பேறுந் தெரிநிலை மெய்மையு
மொன்றிய பொருளா யொல்காப் புகழ்வளர்
மாணிக்கப் பூர சன்குத்து சாண்டகை
மெய்தவ மகவாய் விளங்குபு தூயோன்
குத்புல் மஜீதெனுங் குருத்துவ மாண்பு
முற்றூர்க் கெவ்வினை யுருத்தினு மவ்வினை
பற்றறுத் தொதுக்கும் பான்மையு மிக்குள
கஞ்ச சுவாமியெனுங் காரண நாமமும்
எஞ்சாப் புகழி னிறையருட் பெற்று
வாகையம் மலர்ப்பொழில் வளைஇயத் தொன்னகர்
நாகைவா ழாண்டகை நற்றவப் புத்திரர்
ஞானமும் பொறையு நட்புயர் வாய்மையுந்
தானமுந் தவமுந் தன்னிலைக் கொழீஇய
மோனமும் வீடு முத்தியுஞ் சமநிலை
நாநீ யென்னு மிரண்டறக் கலந்த
ஷாகு செய்யிது முகம்மது யூசுபு
ஆரிபுபில்லாஃ வருங்கழற் போற்றுவான்
விதுபொழி யமுதென வீங்கு நற்றமிழ்ப்
புதுமொழி நறுந்தேன் புலவர் கூட்டுண
நனி யூசுபிய்யா மாலையென் றோர்பா
வினிதுற வமைத்த வெழிலிய ஞரெனில்
இலக்கண விலக்கிய வியல்பணி யாப்பியல்

கலக்கமற் றிறுதி காண்குறக் கற்ருேன்
காக்குமுறைபாற் கழற்சரீண் மாலைப்
பூக்கு முயர்நலம் பொன்ரு தமைந்த
ஞான வெண்பா நவஹிஹத்துல் இஹ்வானி
மோனப் பொருட்டரும் வித்தகப் பாக்களும்
இயற்றி யெவர்க்கு மினிதளித் தருந்தமிழ்ப்
பயிற்றவல்ல பண்பி னனையுரு
றூனிலே மனத்தின னுண்ணிய வறிவினன்
பானிலே மொழியினன் பலகவி திறத்தினன்
மாருப் புகழ்வளர் வான்றரு மதில்வளைப்
பேரு வர்த்த மானியும் பீடுறும்
மீனே தயத்து மிளிர்மதி யென்னும்
ஞானே தயநற் பத்திரி காதிபன்
சற்பனக் களஞ்சியங் கற்ருேர்க் கணிகலன்
விற்பன விவேகன் வியன்மொழி வாயினன்
திரைகட லோட்டும் மரக்கலா திபன்
வரைநிகர் மார்பன் வான்மதி முகத்தினன்
ஹாக்கீம்சாகிபு நகுதா வருந்தவப்
பாக்கிய வழிபடும் பண்புறு மைந்தன்
எனக்கு முன்ன வணிகபர சாதனன்
சினக்கோ டறுக்குஞ் செஞ்சொல் வாயினன்
மூதறிவுடைய முகியித்தீன் அப்துல்
காதி றென்றுயரிய கவின் பெயர் தழைத்தோன்
செய்நவ நூலைச் சித்த முற்று வந்தே
யச்சிட் டளித்த வண்ணலார் கேண்மோ
மட்டார் புகழ்நல மலிந்துறு நாக
பட்டணத் துறுஞ்சீர் பண்பெலாம் பொலிந்தோன்
மானனூர் தழுவுமலர்ப் புய வாகையன்
வான்கரப் பக்கிரு சாகிபு வள்ளல்
செய்தவப் பேறெலாந் திரண்டுருவெடுத்த
கைதவம் யாவுங் கட்டறு முளத்தினன்
சேகு வென்னுஞ் செம்மல்
வாகுறுஞ் செல்வம் வதியுஞ் சீமானே

## காஞ்சீபுரம் மகாவித்துவான் ஸ்ரீ-ல-ஸ்ரீ
## மு. வேதநாயகம் பிள்ளை அவர்களியற்றிய சாத்துக்கவி.

---

### தரவு கோச்சகக்கலிப்பா.

பூமணக்கும் பொழின் மணக்கும் பொழிற்சிறந்த வெழின் மிகுக்குந்
தூமணக்கு மறைமணக்குஞ் சொல்லுறுதி மெய்மணக்கு
நாமணக்கு நடுமணக்கு நலமணக்கும் புலமணக்குந்
தேமணக்குந் தமிழ்மணக்குந் தென்னாகூர்ப் பெருமானர்

சீரிருக்குங் காதரொலித் திகழ் மகவாய்ப் புகழுடைத்தோர்
பேரிருக்கும் யூசுபுசா யபுவொலியின் பெட்பாரு
மாரிருக்குஞ் செங்கழற்கு யூசுப்பிய்யா மாலையென
நேரிருக்கும் மாறளித்த நிலமையெனச் சொலக்கேண்மோ

பொன்பூத்த தனத்தழகன் புகழ்பூத்த நெறிவழுவான்
கொன்பூத்த நெடிய குணக் குசலரடி பணிவல்லான்
நன்பூத்த ஆக்கிம் சாயபு நகுதா தரும் பாலன்
மின்பூத்த மெய்ஞ்ஞான மேதகைய நாகூரான்

அகத்தியந்தொல் காப்பியமுன் னையபல விலக்கணமும்
மகத்துவஞ்சே ரிலக்கணமும் மவுலுபல மதநாலுஞ்
சகத்தியற்சேர் பன்னூலுந் தரந்தரமாய்ப் பயின்றுணர்ந்துச்
சுகத்தியலு மாறுதத் தோன்றலென் மித்திரனும்

சிவஞான மாண்புடையார் தினம் பரவுங் கனமுடையோன்
பவஞான முழுதொழித்த பன்னூற் செய் முன்னூலான்
தவஞான முளமெய்த்தீ னப்துல்காதிற் றகையோன்
நவஞான தேசிகன் மெய் நற்றமிழ்க்கு நாவலனே

---

பிறையாறு பள்ளிவாசல் பஞ்சாயத்தும் கனதனவானுமாகிய
## ஸ்ரீமாந் மு. முஹம்மதுகாசிம் மரைக்காயரவர்க ளியற்றியது.
### கட்டளைக் கலித்துறை.

மண்ணார் விழுமிய நாகைபிரான் றிருமைந்த னென்னத்
திண்ணார் மகத்துவ யூசுபுசாகிப்புஞ் சீரதனைத்
தண்ணா ரமுதினு மெய்க்க வெடுத்திவண் தந்தனன்காண்
பண்ணாறு முகியித் தீனப்துல் காதிரெம் பாவலனே.

பேரூ தமிழ்ஸ்கூல் பிரதமபண்டிதர்

## யாழ்ப்பாணம் ஸ்ரீமத் வே நா. முத்துப்பிள்ளை அவர்கள்கூறிய

### வேண்பா.

சந்தத மகம்மது யூசுபு சாகிபொலி
கந்த மலங்கதகா ணிக்கையாய்ச்—சுந்தரமாய்
யூசுபிய்யா மாலை யுரைத்த மதியூக
தேசிகனைச் சொல்லத் தெரி.

பல்வளஞ்சூழ் நாகூரான் பாவல்ல னெற்கினிவாய்
தொல்காப்பிய பன்னூற் சொல்லிவைத்த—கல்விகடல்
மூதறிஞர் வாழ்த்து முகின்முகிப் தீனப்துல்
காதிரென் னாசிரியன் காண்.

---

இஃது

## பிறையாறு ஸ்ரீமத் மு. வெ. அப்துல் அஜீஜ் மரைக்காயர்

அவர்களியற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்,

ஓங்கலை வாருதிப்புவிக்க ணொளிர்ஞான மதியமென வும்பாருந்
தாங்கதிக வளமிமிர்தென் னாகையர்கோ னருமகவாய்ச் சனித்து நாளும்
தீங்ககற்று சைய்குயூ சுபுவொலிநந் நாயகர்சீர் சிதையா வண்ணம்
பாங்கலர்செந் தமிழ்விருத்தப் பாவினத்தா லினிமைதரப் பாடுகென்ன

துதிகிளரந் நாயகர்தம் பவுத்திரராய் நவத்தினரு டெலங்கந் நாகூர்
பதிகிளர்நஞ் சாகிபுமா ரெனுமறிஞ ரோயாது பல்கால்வேண்ட
நிதிகிளர்தொல் நனியூசு பியாவெனுநல் லமுததனை நிரைய வள்ளி
மதிகிளரும் படியளித்த வவனையிவ ணெவனென்னின்மவுல்வாங்கேண்மோ

கான்குதிக்குங் குழன்மடவார் மடலேறு வடிவழகன் கருணை மாண்பு [ரேன்
தான்குதிக்கு மருள்விழியான் றிராவிடத்திற் குரிசிலெனத் தகைமை சான்
தேன்குதிக்குந் தொடைமார்பன் கல்லார்க்குங் கற்றுவிக்குந் திறமையாளன்
நான்குதிக்குந் துதிக்கவருங் கவிச்சக்ர வர்த்தியென நாமம் பூண்டோன்

நற்றுதிசொ ளியலனுவுங் கற்றுணரா திகமிகழ நகைக்க நாணஞ்
சற்றுமிலா தகம்படைத்து வாய்ப்பகட்டு மடப்புலவர் தலைநீட்டாது
முற்றுமக மொடுங்கியடங் கிடஞான்று மறிஞர்குழா முழுதும் போற்றச்
செற்றுளிநேர் கவிதையுரை பிரசங்கஞ் சொலவரையச் செய்ய வல்லோன்

நடிவாய்ந்த வுயர்குலத்த ருந்தவத்தர் பெருவாத்தர் ஞானவான்கள்
குடிவாய்ந்த நாகைநகர் ஹாக்கிம்சாஹிபு நகுதாக் குமா ரனேனன்
முடிவாய்ந்த மன்னவை மதிசுல்த்தான் மரைக்காயன் முன்னோ னெனன்
கடிவாய்ந்த வியன்முகியித் தீனப்துல் காதிறெனுங் கவிச்சிங்கமே.

திருமலைராயன் பட்டணம்

MADRAS

## மகா-ா-ஸ்ரீ அ· முகியித்தீன் பாவா இயற்றியது.

—:o:—

### விருத்தம்.

சீரிருக்கும் புகழ் நாகை செய்யிது ஷாஹமி தொலியிஞ் செல்வப்பாலர்
பேரிருக்குஞ் செய்யிது யூசுபு சாஹி பொலி பெருமான் பெட்புற்றோங்குங்
காரிருக்குஞ் செங்கழற் கோர் யூசுபியா மாலையெனக் கணித்தயோகன்
தாரிருக்குந் திருநாகூராக்கிம் சாகிபு நகுதா தவத்தின் மைந்தன்
மான்குதிக்கும் புலவர்பிரான் கவி சுல்த்தான் மரைக்காயர் சமையன்மிக்கும்
வான் குதிக்கு மதியூகன் வரந்தரமு முருவெடுத்தே வந்த தீரன்
தேன் குதிக்கும் புயத்தழகன் பன்னூற்கட் செயுந்தகுதி சிறந்த நண்பன்
நான்கு திக்கும் புகழ் முகியித்தீனப்துல்காதிரெனு நாவல்லோனே.

---

## நாகூர் ம-ா-ஸ்ரீ யூ·சி· பக்கீர்மஸ்தான் கவிஞர் பாடியது.

### விருத்தம்

தனநிறைந்த தென்னாகூர் சாகமீது குத்துபுல்லாஃ தவத்தின் மைந்தர்
கனநிறைந்த வொலிபெருமான் யூசுபுசாகிபினிரு கதத்தைப்போற்றி
மனநிறைந்த யூசுபிய்யா மாலையென்றோர் நூலியற்றி வழங்குந்திவ்யன்
சனநிறைந்த குலத்துங்கனடைந்தாரைத் தாணுக்குந்தகுதிவாய்ந்தோன்
கலைசிறந்தத் தமிழ்க்கடற்குக் கரைக்கண்ட வதியூகிக் கருதும்ஞான
நிலைசிறந்த தவத்தழக னாக்கிம்சா கிபுநகுதா நிலமை மைந்தன்
விலைசிறந்த பன்னூற்கட் செயுந்தகுதி யுறுமேன்மை விளங்குஞ்சீலன்
தலைசிறந்த திருமுகியித் தீனப்துல் காதிரெனுந் தமிழ்வல்லோனே.

---

நாகூர் தர்கா சாகிபுமார்களில் ஹமீது முகையத்தீன் ஆலிம்சாகிபு குமாரரும்
கல்விக்களஞ்சியம் முகம்மதுப் புலவரின் மாணாக்கரி லொருவருமான

## மவ்லூது ம-ா-ஸ்ரீ செய்கு முகியித்தீன் சாகிபு பாவலர் இயற்றிய சாற்றுக்கவி.

### ஆசிரியவிருத்தம்.

காரார்ந்திடும் பொழி நாகையில் வாழ் ஷாஹமீதொலியின்
பேரார்ந்திடு மக செய்யிது யூசுபு பெட்பினர் மேற்
சீரார்ந்திடும்புகழ் யூசுபியா மாலை செப்புமிந்தப்
பாரார்ந்திடு முகிய்யித்தீ னப்துல்காதிர் பாவலனே.

## நாகூர் தர்கா மகா வித்துவானாகிய வா. குலாம்காதிறு நாவலரவர்களின் மாணாக்கர் தர்கா பிரசங்கி க. காதிறுமுகியித்தீன் சாகிபு அவர்களாலியற்றியது.

---

### ஆசிரியவிருத்தம்.

ஒன்றாகிப் பலவாகியுரு வருவாகியவொருவ னுசப்பினுள்ளே
நின்றாடுங் குத்புகட்கதி பரானநிமல ஷாஹமீதென்னாதர்
குன்றாதப் புகழமைந்த வற்புதத்தின் குலமக நன்குன்றதான
மன்றாறுந் துதிமலிந்த செய்யிது யூசுபென்னு மன்னர்மீதே (1)

தேனொழுகு முக்கனிகற்கண் டமுதின்சுவையனைத்துந் திகைக்குமாறும்
வானுலகும் பூவுலகுஞ் சிரமேற்றிக்கொண்டாடி வழுத்துமாறு
மீனுலவுங் கடலுலகிலமர் புலவருளமீது மேவுமாறு
மீனமறும் பாவினத்தால் யூசுபிய்யாமாலையென வியம்பினானே (2)

அன்னவனைக்கூறு தமியாரெனிலோவன நடனமாதரின்பாய்
மின்னனையமாட மதிற்றுயல் காலையணைமீதின் மலரினங்கடன்னைத்
தென்னலெடுத் தெறிவதனாலமர் குவியலினைக் காண்போர் திகைக்குமாறு
வுன்னதமிக்குறுந் தெருக்களொழுங்காக வமைந்திருக்குமுயர் நாகூரான் (3)

எழுத்தொடு சொற்பொருள் யாப்புவணிமுதலா மிலக்கணங்க ளென்ப
[வெல்லாந்
தழைத்திருக்கு முளத்துடையா னடுத்தவரைத் தானாக்குந் தகுதியுள்ளான்
வழுத்தரிய ஹக்கீகத்துவின் சாணியாவென்னும் வசனநூலைப்
பழுத்திடுமுக்கனி யின்பமொவ்வூறு வகையமைத்த பாவல்லோனே (4)

நூலேந்தும் புலவருடுவின நடுவன்மதியனையா னுலவுங்கல்விக்
கோலேந்துங் கையுடையான் குங்குமத்தா ரினிதோங்குங் குவவுதோழன்
பாலேந்து முலைமடவார் மையற்கொளும் பாங்குடையான் பகர்தற்காயச்
சூலேந்து முகிலினங்கடியக் கழுறப்பாவினங்கட் சொரியும்வாக்கான் (5)

கலைததும்பு முளத்துடையான் கற்றோரை யாதரிக்குங் கருணைமிக்கான்
அலைததும்புங் கடலுலகிலமர் கவிஞருளத்தென்று மகலாநிற்போன்
கிலைததும்பும் வர்த்தக னாக்கீன்சாகிபு நகுதாவினிது பாலன்
தலைததும்பும் புலவரெல்லா முளமீதிற் கொண்டாடுந் தகையுள்ளோனே (6)

வன்மையுறுங் குத்பொலிக டிருவடியை யுளத்தேற்றி வணங்குந்திவ்யன்
புன்மையுறு மில்வாழ்க்கை யினைவெறுத்து வொருபொருளுள் ளகத்திற்
கொள்வோன்]
பன்மையுறு நற்குணங்களினை யாடையெனப் புனைந்த பாக்கியசீலன்
நன்மையுறு முளத்துமுகியித்தீ னப்துல்காதிறென்னு நாவல்லோனே (7)

பிஸமில்லாஹி,

பாப்பான் பெரிய கோர்ட்டு துவிபாஷிகர், தஞ்சாவூர்

## ம-ா-ஸ்ரீ இ. கா. அஃகமதுசாகிபு ஹாஜீயார் அவர்கள் பாடியது.

---

### வெண்பா.

தேசுலவு நாகூர்வாழ் செய்யிது முகம்மது
யூசுபு சாகிபொலி யுத்தமர்மேல்—யூசுபிய்யா
மாலையா நூலை வகுத்த குண திலகன்
போலேகவி வல்லவன்யார் போற்று

நவீஹத்து விஹ்வானி ஞானவெண்பா நூறு
நவீஹத்துல் முஸ்லிமீன் நன்னூல்—உசிதமாய்
ஹீரத்துல் பிக்ஹூஅம்மெய்ஞ் ஞானகீர்த்த னங்கட்பல்
வீரத்துடன் செய்த வேள்

சொல்லு பொருள்யாப்பு தொகுதிபல வுந்தேர்ந்த
வல்லுநன் வாலிலக்க சவ்மியம்—சொல்லிவைத்த
ஆசான் முகியித்தீ னப்துல்கா திற்குநிகர்
தேசிகன்யா ரிவ்வுலகிற் செப்பு.

---

சிங்கப்பூர் ஜவுளி வர்த்தகர்,
நாகபட்டணம்

## ம-ா-ஸ்ரீ யூ. ஹாஜி முகம்மதுக்காசிம்மரைக்காயர் அவர்கள் இயற்றியது.

---

### விருத்தம்.

மணிகொழிக்குந் திருநாகை வாழ்ஷாகுல் ஹமிதொலித்தன் மகிமைபாலர்
திணிகொழிக்கு மில்லறத்துட்டுறவறத்தைத் தெரிந்திறையைத் தரிசித்து
பணி கொழிக்குஞ் செய்யிது யூசுபு சாகி பெம்மான்றன் பைந்தாளிற்கு [ய்ய
அணிகொழிக்குந்தோத்திரப்பாயூசுப்பியாமாலையெனவறைந்தான்கேண்மோ.

தாரிருக்குங் கரத்தழகன் ஆக்கிம்சாகிபு நகுதா தவத்தின் மைந்தன்
சீருக்கும் புலவர் பிரான் சித்ரகவிநாவலன் மெய்திகழ்ந்த நெஞ்சான்
பேரிருக்கும் புகழ் சுல்தான் மரைக்காயன் சோதரன்பேர் பிறங்குமாண்பன்
காரிருக்கு மெய்ஞ்ஞான நூற்பலவாயத்தந்துலகைக் கவியச் செய்தோன்.

திருவேறு மருணிறைந்த நெறிவழுவான் முன்னூற்கட்டெரிந்த தீரான்
தருவேறு மெனதரிய குருபரன் மெய்ச் செந்தமிழிங் கடலுண்டோனங்
கருவேறும் பெருந்தகுதியுள மவுனக்கரைகண்ட கல்விச்செல்வன்
பொருவேறுந்திகழ் முகியித்தீனப்துல் காதிறெனும் புலவரேறே.

நாகூர் ம-ா-ஸ்ரீ இ. செய்யிதகமது அவர்கள் கூறிய

வெண்பா.

வாசர் புகழ்யூசுப் சாகிபொலி வள்ளன்மேல்
யூசுபிய்யா மாலை யுரைத்தனன்—வாசமிகுஞ்
சீதமலர் சோலைதிகழ் நாகைமெய் தீனப்துல்
காதிர்நா வல்லவனைக் காண்.

நன்னூற்பன் னூற்புகட்டு நல்லா சிரியன்மெய்
முன்னூ லுணர்ந்த முதுமொழியன்—இந்நூலை
ஓதுந் தகுதியுய ரொண்முகியித் தீனப்துல்
காதிற் கிணையெவராங் காண்.

——:o:——

கும்பகோணம் ம-ா.ஸ்ரீ உ. தெ. அருணாசல முதலியார்

அவர்கள் இயற்றியது.

அகவல்.

தேன்படும் பூம்பொழிற் செறியு மரிய
வான்படு மாட மாளிகை பல்லனத்
துன்னு நாகூர் துறையாங் கமீதொலித்
தன்னுயர் மகவாய்ச் சாற்று மருளுளர்
மகம்மது யூசுபு மான்மியக் கடவுள்
சகமிகுஞ் செந்தாள் காணிக்கையாக
யூசுபிப்பாமாலை யுரைத்தமன் யாரெனில்
ஆசானெற் காமணி இலக்கணத்தின்
வைத்திய சாகரம் வருங்கால மறிந்தோன்
கைதவ முடைய காருண்ய சீலன்
நாடி பரிட்சை நன்குற வுணர்ந்தோன்
சாடி யிற்சமம் பகரொண்ணாது
இலக்கணக் கடலுண் டிறுமாப் படைந்தோன்
இலக்கிய பொக்கிஷ மினிய நூற் பலவும்
கற்றவன் மெய்தீ னப்துல் காதிர்
நற்றவ முள்ள நல்ல ஞானி
வல்லுநர் மெச்சும் வாகன்
பல்லவர் புகழும் பாவல்லோனே.

பிஸ்மில்லாஹி.

இஃது

நாகூர்

# யூசுபிய்யா மாலை.

### வெண்பா, காப்பு.

உலகம் புகழ்நல யூசுபிய்யா மாலைக்
கலகமறக் காத்தற் கடனே—இலகு
மகக்கண் டிறந்தோ ருளத்தே யமர்ந்த
அஃகமுல் ஹாக்கமீ னுக்கு.

### விருத்தம்.

வேத விதிக்கு ஹதீதிக்குச் சற்றும் விரோதமின்றி
நீதி சறீஅத்திற் றேர்ந்து முகம்மலாய் நேர்நிறைவி
ஓதி மஅரிபத் தொண்ணறிவீனி லூடாடியிறை
காதன் மிகுநவ முகம்மது யூசுபு காரணரே. (1)

செல்வமுமான சிறப்புந் தருமத் திருமறையு
நல்வள முற்றதென் ஞைகஹமீதொலி நன்மகவாய்க்
கல்விக்கடலா யிகபரசாதனங் கமாலிய்யத் தாய்க்
கல்வற்றிருந்த முகம்மது யூசுபு காரணரே. (2)

சிருறு மாறேூர் வயதினிலோதித் திரும்பிடுங்கால்
நேரு மசிரீரி சத்தத்தினுற் றந்தை நிலைமையரென்
யாருரையென்ன மறுத்துந்தவத்தா லறிந்து சன்ஆன்
காருரடைந்த முகம்மது யூசுபு காரணரே. (3)

ஆராயுமோன வறிவினிற் ரேய்ந்தே யமைதியுற்றுப்
பூராயமான பொருளைவிளங்கிப் போராடி தன்னிற்
கூராய் ஷாஹாது செய்ஹக்குல் எக்கீனிங் குணம்படைத்த
காராருஞ் செய்யிது முகம்மது யூசுபு காரணரே (4)

தாருற்ற பூம்பொழிற்சூழ் நாகை ஷாஹால் கமிதொலித்தன்
பேருற்ற நற்றவத்தாலே பிறந்த பெருமைகுன்றே
சிருற்றநுந் திருவாயன் முன்வந்துத் தினம்பணிவோர்
காருற்றசெல்வர் முகம்மது யூசுபு காரணரே (5)

தத்துவஞான தவத்திற் சிறந்தே சமஸ்தமுந்தன்
உத்தமங்கொண்டு நடத்துங் ஹமீதொலி யுள்ளறிவின்
சத்துவரத்திந புத்திராகுங் தகுதியுளீர்
கத்தரே செய்யிது முகம்மது யூசுபு காரணரே (6)

அண்டர்புகழ் ஷாஹமிதொலிநாயக ரற்புதத்தைக்
கொண்ட மானேதய பாலர்மஞ் செல்வக் குலக்கொழுந்தே
மண்டலம் போற்றுபு நுந்திருவாயன் மகிமையைக்கண்
கண்டபி னுண்டோபுண் முகம்மதுயூசுபு காரணரே. (7)

மாது மையற்கொடும் வாதனைமேவி வருந்திழிந்த
போதுமைச் சார்ந்தவர் நல்லவர் ஞானப் புலனுடையோர்
தீது மயலகனுந் திருவாயலில் வந்துகலங்
காதுமை நம்பினேன் முகம்மது யூசுபு காரணரே. (8)

நேசிக்கும்ராச விசுவாசபாச நிறைந்துள்ளவர்
பூசிக்குநுந் திருவாயன் முழுதும் பொலியுமண
வாசிக்கும் பேரவர்க்குண்டு கொண்மாண்பு வளரும்பிர
காசிக்குஞ் செல்வ முகம்மது யூசுபு காரணரே (9)

சொல்லுக்கழகிய வல்லுநர் போற்றுந் துரையே கெடுந்
தல்லுக்கு நல்ல மருந்தாகுநுந் தருகாவிலுள்ள
கல்லுக்குங் கல்வினு ளுள்ளபுழுதிக்குங் காணுங்கருங்
கல்லுக்கு மாட்சி முகம்மது யூசுபு காரணரே. (10)

உய்யும்வழியு முயர்நிலை மாண்புநன் னுத்தமமு
மெய்யும் விளக்குபு நுந்திருவாயல் விளக்கினுள்ள
நெய்யைத் தன்மேனியிற் பூசியிரஞ்சிடி னீடுபலன்
கையு மெய்யாகு முகம்மது யூசுபு காரணரே. (11)

முடிதொட்ட மன்னவர் பன்னவர் ஞானமெய் மூதறிஞர்
மிடிதொட்டவர் நலமின்னு நுமதிருச் சந்நிதிமுற்
படிதொட்டு முத்தியிட்டோ ரவர்க்குண்டு கொட் பண்பனைத்தும்
கடிதொட் டலவுமென் முகம்மதுயூசுபு காரணரே. (12)

மண்கொண்ட லோக மருட்சியிற் சிக்கி மரபொழிந்தே
புண்கொண்ட சிந்தையர் பூரணமாட்சி பொலியுமிரு
தண்கொண்ட னுந்திருவாயற் றனையியற் சார்ந்தவர்க்குக்
கண்கொண்ட காட்சி முகம்மது யூசுபு காரணரே (13)

வஞ்சகஞ் சூது வறுமை பலவும் வந்தவழி
பஞ்சாகு மெய்யிது நுந் திருவாயலிற் பன்முறையும்
கெஞ்சு மவர்க்குக் குறையாது மின்று மெய்க் கிருபையுளக்
கஞ்சமலர்ப்பத முகம்மது யூசுபு காரணரே (14)

வாதித்த வுள்ளமும் வருந்திக் கொடுமை வறுமையினுற்
பேதித்த மேனியு முள்ளவ ராகுவர் பெருந்தகுதி
சாதித்து நின்று நும் வாயல லகாற்றடவப் பெற்றுற்
காதித்த நாகை முகம்மது யூசுபு காரணரே (15)

ஆசித்த வல்லுநர் பல்லவரல்ல லகலநித
நேசித்தா னுந்திருவாயலைத் துன்ப நிறைகுறையும்
வாசித்த தூமநறு மணத்தாற் றகைவாய்க்கும்பிர
காசித்த நாகை முகம்மது யூசுபு காரணரே (16)

பொய்கட்டிலோக மருட்சியிற் சிக்கினர் பொன்முகிற்போன்
மெய்கட்டி வந்தவ ருந்திருச் சந்நிதி லீகவீதைப்
பைகட்டி செல்லுவர்ப் பத்திவைராக்கிய பண்புறுவர்
கைகட்டி நின்றவர் முகம்மது யூசுபு காரணரே (17)

பொய்யிது வென்ன சிகத்தை வெறுத்துப் புலனடக்கிச்
செய்யிது வென்ன மனதைத் திருத்தித் திருவருளின்
மெய்யிது வென்ன பரமவிருப்பத்தில் வெந்துத்தன்னைக்
கையிது வென்னகொண் முகம்மது யூசுபு காரணரே (18)

பைகண்ட பாதையை விட்டுப்பொய்கொண்ட பாதைப்பற்றிச்
சைகண்டவர்க்குத் தரமுந்தகுதியுந் தன்மையற்று
மைகண்டவர்க்குப் பொன்னென்னு நும்வாயன் மணப்புகைகட்
கைகண்ட விழ்தமே முகம்மது யூசுபு காரணரே (19)

தேட்ட மிகும்பர மாநந்தசோதி திகழுமில்லிற்
சாட்ட தொனிக்குஞ் சலவாத்து தஃலீலு தக்பீராத்தைக்
கேட்ட வுடனறமெய் பெருநோவுங் கிளரியலைக்
காட்டு முகம்மது யூசுபு சாகிபு காரணரே (20)

பூக்கு மவுனக் கடலொலி மார்கட் பொலிந்துநிதம்
வாக்கு மன்முமொன் ருகநும்மில்லில் வாய்பொத்திநின்று
கேட்கும் வரத்தை யளிக்குந் தகுதிக் கிருபையுளீர்க்
காக்குந் தவத்தினர் முகம்மது யூசுபு காரணரே (21)

ஐயமறு மருளன்புஞ் சன்மான மெய்பாதரிப்புஞ்
செய்யுநும் வாயிலளிக்கும் பூச்சந்தன திரவியத்தை
யுப்ப விரும்பியே கொள்ளாக் கரத்திற் குவமைமரக்
கையா முகம்மது யூசுபு சாகிபு காரணரே (22)

அஞ்சு மினுரு வலங்கார வாயலழகுமுயர்
கொஞ்சுஞ் சிறப்பைக் கண்கண்டவர்க்குண்டு கொள்கூர் பெருமை
வஞ்சகஞ் சூனிய மெல்லா மகன்று நன்வகை பெறுவர்
கஞ்சமலர்த்தாண் முகம்மது யூசுபு காரணரே (23)

பைத்தவ ஷாஹுல் ஹமீதொலி நாயகர்தம் பாக்கியத்தை
மெய்த்தவ காலிநூறுத்தீன் மனைவியின் வயிற்றில்
வைத்தவதாரம் பெற்றுல காதிபர்கள் வாழ்த்தவந்த
கைத்தவ செய்பிது முகம்மது யூசுபு காரணரே (24)

வாடுமிடுமையுந் துன்பமும் போக வகைபலவாய்
கூடுமெளியவர் கோடானுகோடிக் குறைகளறப்
பாடுங் கவிஞர்கண் மிக்குளர் செல்வப் பலங்கண்மிகுங்
காடுள நாகை முகம்மது யூசுபு காரணரே (25)

வாதித்த பல்வினைத் துன்பம் வறுமைப் படிறுமமற்ற
சாதித்த லோக விகழ்ச்சியுந் தானே தரந்தரமாய்
ஆதித்தன் கண்ட பனிபோலகலு மருங்கழலைக்
காதிததவர்க்கு முகம்மது யூசுபு காரணரே (26)

விண்கண்டமாட மாளிகை நெருங்கி விளங்குதிருத்
தண்கண்ட சோலைசெறி நாகை செல்வ தறுகாவினுட்
புண்கண்ட நெஞ்சு நர்புகுந்து பணிந்தாற் புகழடைதற்
கண்கண்ட காட்சி முகம்மது யூசுபு காரணரே (27)

கோவுக்குயிர் கொடு ஷாஹூல் ஹமீதொலிக் குத்துபு ஜமான்
நாவுக்கினிய மகவாய் விளங்குபு நவினகற்ப
காவுக்கு மிக்ககரத் தீர்க்கருணை புரியுந்தறு
காவுக்கி ராஜர் முகம்மது யூசுபு காரணரே (28)

கோலென்ன மாலென்ன காலவிதற்ப சுழப்பமதி
ஞாலென்ன வாகுமெய் நாடும்பயனை நமக்களிப்ப
தாலென்னவாங் குறைநின்றஞ் சந்நிதியை நாடிவராக்
காலென்னவாகு முகம்மதுயூசுபு காரணரே (29)

பெண்ணென்ன பொன்னென்ன பேராசைவைத்தமர் பெரிதுழன்று
புண்ணென்ன வானவச் சிந்தையர் சந்ததம் புகழுறுக
மண்ணென்ன வாய்க்குநன்னுந் திருவாயன் மாண்பறியாக்
கண்ணென்னவாகு முகம்மது யூசுபு காரணரே (30)

சீலமுமான சிறப்புறு நுந்திரு வாயலிற்பற்
கோலமுடையா ரடைவர் மவுனக் குறிப்புமிரு
தாலம்புகழு நுந்தாளீந்து காத்தற் றமியேனெற்குக்
காலமிதுவா முகம்மது யூசுபு காரணரே (31)

அண்டமும் பிண்டமு மொன்றுய்ச் சமைத்தரசாண் மகிமை
கொண்ட பரனருடீதரு கந்த குலக்கொழுந்தே
கொண்ட மனக்குறை நுந்திருவாயற் றுளக்கத்தைக்கண்
கண்ட பின்னுண்டோ முகம்மது யூசுபு காரணரே (32)

பாபத்தைநீத்து பல்வினை போக்கிப் பரனருளிற்
ருபத்தைத் தாக்கிச் சதாநந்த மோநந் தனையளிக்குங்
கோபத்தைப் போக்கிடு நுங்கடெரி ஜனங் கொள்பவர்க்குக்
காபத் ததிதரு முகம்மது யூசுபு காரணரே (33)

சந்ததம் விந்தை தழைத்தமர் செல்வத் தரமுறு நுஞ்
சந்ததியார் தாதா சாகிபென் றேத்துந் தவக்கடலே
வந்தத ஞேபகாரா வெனையாள்க வள்ரு மருட்
கந்தமலர்த்தாண் முகம்மது யூசுபு காரணரே (34)

வாக்கு வலிமையும் வாய்மையும் வாய்த்துழிவான் பொருளும்
பூக்கு மனோதய வுண்மையும் மேன்மையும் புண்ணியமும்
நாக்கு வலியு முண்டாகு நுந்தாளை நம்பு நர்க்குக்
காக்கு மொலியே முகம்மது யூசுபு காரணரே (35)

கொடியவினையு மடமாதர் மையலாற் கெடுங்குணமும்
மிடியால் வடிவற் றுடலாண்மை குன்றிமிக வருந்திப்
படியாரிகழற்கு முரியவ விழ்தநும் பங்கயத்தாள்
கடியார்திகழு முகம்மது யூசுபு காரணரே (36)

உலகம் பணிந்தியக் கேட்டதளிக்கு மெய்யுயர்வு பெற்றீர்
திலகம தாயொளி மாருட்சிறந்திருஞ் சந்நிதியின்
னலகாற்றடவிடப் போகாவினையே தடியேன் மனக்
கலக மகற்றுமின் முகம்மது யூசுபு காரணரே (37)

கூடாத காரிய மியாவுஞ் க்ஷணத்தினிற் கூட்டிவைக்கும்
வாடாத மாமலர்த் தாணு மினிதாய் வருந்திநித
நாடாத சிந்தைக் கீடாகுமே பல்லர் நாணுஞ் சுடுக்
காடாந்தவத்து முகம்மது யூசுபு காரணரே (38)

ஆதார மற்றவர் மற்றவர் கற்றவரறிவிழந்தோர்
பாதார நம்பி வருவா ரனுதினம் பயனடைவார்
சேதார மன்றியே மானுகர் வார்திரு வாயற்புகழ்க்
காதார கேட்பவர் முகம்மது யூசுபு காரணரே (39)

சல்லாபமான சாயுட்ச பதவியிற் சார்ந்தரிய
வுல்லாசமிக்கு முயர் வடைந்தீ ருலகோர் பணியும்
வல்லாண்மையுள்ள துரையே வறுமை யறவெளிய
கல்லானை யாட்கொள்ளு முகம்மது யூசுபு காரணரே (40)

பாவலர் கற்பனையாற் பலபாக்கட் பாடியும்மில்
ஆவலாய் வந்தரங் கேற்றுவர் நித்யமருஞ் சதிற்
பூவலர் வாழ்த்தரு ளாநந்த ரட்சகாய்ப் புல்லனெற்குக்
காவலர் நீராகு முகம்மது யூசுபு காரணரே. (41)

முத்தெனச் சோதிக்கு நுந்திருவாயலின் முன்னிருந்து
சித்தமகிழ்ந் தோதுவர் மவுலூதின் சிறப்பினைய
சத்தத்தைக் கேழ்ப்பர்ப்பிணி சத்தடங்கித் தகையடைவர்
கத்தனுகந்த முகம்மது யூசுபு காரணரே. (42)

சுத்தமிருக்குநன் னுந்திருவாயலிற் சூழ்ந்துமிக
நித்தந் தருமம்பெறக் காத்திருக்குந் தன்னிலை யிழந்தோர்
இத்தனையென்ன கணித்தற் கியலா யினியபுகழ்
கத்தரே செய்யிது முகம்மதுயூசுபு காரணரே. (43)

சாபத்தை யோட்டுமென்னுந் தறுகாவி விலங்குபல
தீபத்தைக் காண்பர்தஞ் சிந்தைமகிழ மெழுச்சியினல்
ஆடத்தை நீக்குவரார் விழிநோக்கி யடியேனெனைக்
காபத்தை செய்யு முகமமது யூசுபு காரணரே. (44)

சீலத்தை விட்டுச் சிற்றின்ப விரகத்திற் சேர்ழிந்தோர்க்
கோலத்தை மாற்றிநற் குணத்தருண்மான குன்றேயனு
கூலத்தை யீட்டியாநந்த பதவியைக் கொடுக்குமொரு
காலத்தைக் காட்டு முகம்மதுயூசுபு காரணரே. (45)

வாட்டமகற்று மெய்ந்நுந் தலைமாட்டு வாயலின்பூந்
தோட்டத்திற் பூண்டிலை யுண்டவர் பண்டுளத் தொய்யலற்று
நாட்ட நிலைத்துழி புத்திரசம்பத்து நன்மைபெறக்
காட்டு மகத்துவம் முகம்மது யூசுபு காரணரே (46)

சதமற்ற லோகவவிட் கையிலாகித் தகுதியறும்
பதமற்ற கிரிகையர்வந்து நும்பாவிற் பற்றுதலா
யிதம்பெற்றிருக்க விரங்குகவென்ன வெழிற்சிறந்த
கதம்பெற்ற நர்க்குண்டு முகம்மது யூசுபு காரணரே. (47)

பழக்கம் பெரிதாகப் பற்றுதலாய்த் திங்கள் வெள்ளியிரா
வழக்கமா யில்லில் வந்துறங்கு நர்மிக்க வருசையினர்
முழக்குந் திருமறைபாங் குக்குமுன்னர் தரிசனமாங்
கழற்கு முரியவர் முகம்மது யூசுபு காரணரே, (48)

வரத்திற் சிறந்தநுந் தறுகாவிலோங்கி வளர்ந்தபுளி
மரத்தி னிலைபறித்துண் ணன்மறையும் வினைபலவுந்
தரத்திற் செழித்துப் பெரும்பயனெத்துவர் தருமமுளக்
கரத்திற் சிறந்தமன் முகம்மது யூசுபு காரணரே (49)

தளிர்க்கும் புகழியநுந் தறுகாக்குளந் தன்னினிதங்
குளிக்குநர்க் குறுநோய் பலதோட்டிச் சற்குணமதனை
யளிக்குங் கொடியவினை போக்கும் ஞான்று மறியமனங்
களிக்கும் புகழீர் முகம்மது யூசுபு காரணரே (50)

வாதமிளைப்பு மெய்காந்தற் புண்ணீளவன் கக்கிரும்பல்
சீதளமூலக் கடுப்புப் பவுத்திரஞ் செங்கிரந்தி
யூதற் பலவுநுங் காமமுரைத்திடி லுடன்வெருண்டு
காதம் விலவு முகம்மது யூசுபு காரணரே. (51)

ஒலிகட்பெருமா னுபாத்திலு ரைத்தவுத் தரவின்படிக்
கலிறு நபியைச் சந்தித்தரிய கனமுடைத்து
பொலியுங் கவலையகற் றிப்புகழ்மெய்க் கடற்குளித்தோய்க்
கலியை யகற்றுமின் முகம்மது யூசுபு காரணரே (52)

சூதகரோக நீரோக திரேக சொறீஇ குன்மம்
வாதுபடுக்துங் காமாலைப் பெரும்வயிற் கல்லடைப்பும்
பாதந்தொழுக வெளிச்சத் திருள்போற் படுமடவார்
காதற்றவிர்க்கு முகம்மது யூசுபு காரணரே (53)

ஊருக்குளூரூர் வசிப்போ ருகந்துள வுண்மையுடன்
சீருக்குஞ் செல்வ சிறப்புக்குந் தீரும்வறு மைக்குநா
கூருக்கு வந்துநுஞ் சந்நிதிபூந்துக் குறையிரப்பார்க்
காருக்கு மிக்கர் முகம்மதுயூசுபு காரணரே. (54)

துய்யேந்திய புலஞான நற்றீபமாய்த் துலங்குநல
மெய்யேந்திய திருநுந் திருவாயலின் மேவிபலர்
நைய்யேந்திய துயர்முற்று முரைத்தே நடுநடுங்கிக்
கைய்யேந்தி நிற்பர்மெய் முகம்மது யூசுபு காரணரே (55)

பூக்கு மகத்துவ நுங் திருவாயலிற் புகுந்தனர் நோய்
போக்கு முலக விருண் மேவுநெஞ்சம் பொன்மயமா
யாக்குந் தவத்தி னழகோங்கச் செய்பு மடியேனெனைக்
காக்கு நவத்தின் முகம்மது யூசுபு காரணரே (56)

மண்ணாசையோடு பொருளாசை மன்னி மையன்மிகும்
பெண்ணாசைக் கொள்பவர் பேருளரன்றுப் பெட்புடையோர்
ஆண்ணாசை போக்கு நுந்திருவாயலைப் பார்க்க நிதங்
கண்ணாசை யுள்ளவர் முகம்மது யூசுபு காரணரே (57)

நீட்சி பெறும்பல மண்டபமாட நிறைந்து மின்னும்
மாட்சி தருந்திருநுந் தெழில்வாயலில் வந்திரப்போர்
மீட்சி பெறுவர் சதாநந்தமான வியன்மலிந்த
காட்சி பெறுவர் முகம்மது யூசுபு காரணரே (58)

முத்திக்கு மோன முறைக்கும் பொறுமைக்கு மோகமிகும்
பத்திக்கு நுந்திருவாயலின் வந்து பணிபவர்க்குச்
சித்திக்கு மியாவுந் தகுதியும் வாய்த்துழி சீருறஜீ
சத்திற்கு ராஜர் முகம்மது யூசுபு காரணரே (59)

ஆரிய மிக்குறு நுந்திருவாய லடைந்தநர் நேர்
வீரியர் ஞானம் விளக்குந் தவத்தினர் மேதகையர்
பூரிய ராயினு மியாவும் படைப்பர் புகழெற்கருட்
காரிய சித்தியா முகம்மது யூசுபு காரணரே (60)

நிதியையுங் காட்டி நிலமையுங் காட்டி நிரையுமன
மதியையுங் காட்டி மகிமையுங் காட்டி மறைமுறையின்
றுதியையுங் காட்டித் துகட்பல தோட்டிடுந் துரைசிங்கமெற்
கதியையுங் காட்டுமின் முகம்மது யூசுபு காரணரே (61)

தவிக்கு நவிக்குளக்கன் றிரண்டை மீட்டி தந்துதவிப்
புவிக்குத் துணைபுரியெங்கோனு கந்த புதல்வரேபுண்
ணவிக்குறும திருத்தாளருமை தனைச்சாற்று மென்றன்
கவிக்கு மருட்புரி முகம்மது யூசுபு காரணரே (62)

பூசிக்கு மாண்புள மன்னர் பணியும் புகழுடையீர்
நேசிக்கு நுந்திருவாயில் வருவர்க ணீடலகு
தூசிக்குந் தூமத்திற்கும் வருந்தியென் றேய்ந்துபிர
காசிக்கும் பாத முகம்மது யூசுபு காரணரே (63)

வாட்டுங் கொடியநோய் வினையாவையும் வந்தவழி
யோட்டுந் தகுதியு முண்மையு மோட்சமு முள்ளறிவும்
பூட்டு மரிய வொலிமார் புகழும் புதினருன்றே
காட்டு மகத்துவம் முகம்மது யூசுபு காரணரே (64)

பாசமிகுந்த பிறதேச வாசிகட் பன்னயங்கொள்
வாசலடைந்துப் பெருந்தன்மை வாய்த்தனர் மையன் மிகும்
தோச மகன்றன ரெஞ்ஞான்று மாண்பு துலங்குபிர
காசம் பிறங்கு முகம்மது யூசுபு காரணரே (65)

தூரநகர் முடிமன்ன ரடிக்கடித் தொழுதிரஞ்ச
வாரங்க டோறும் வருவார் கணக்கிலர் மாணர்செயுங்
கோர மகன்றுதார மருவுவரிக் கோழைக்குப
காரம் புரிகுவீர் முகம்மது யூசுபு காரணரே (66)

மையாருஞ் சிந்தையர் மாசகணீங்கி மனங்கசிந்து
மெய்யார் பிணிபல தோட்டிச் சுகத்தை விரும்புநர்கள்
பையார் நலமுன்னுந் திருவாயற் படியைத் தொட்டுக்
கையாரத் தீண்டுவர் முகம்மது யூசுபு காரணரே (67)

குன்றாத வாழ்வுங் குறையாத செல்வமுங் குதுகுலிப்பும்
அன்றாத மாட்சியுமுள்ள நுஞ்சந்நிதி லன்புடைத்து
நின்றா தரவினைத் தேடிநின் றேற்றுவர் நிதநிதமுங்
கன்றாத கீர்த்தியர் முகம்மது யூசுபு காரணரே (68)

பேருற்ற சீரும் பேறுந் தவத் தன்மையும் பீடும்பல
சீருற்ற யோகமுஞ் சித்திக்கு நுந்திரு வாயலின் முன்
நேருற்றிருந்து கைகட்டி வாய்பொத்தி நிலைதரித்துக்
காருற்ற நர்க்கு முகம்மது யூசுபு காரணரே (69)

அருந் தவத்திநுஞ் சந்ததியாரோ டழகிலங்க
விருந்த முதுபக்கிலிருந் திரஞ்சுநர் நோயகன்று
மருந் தன்றித் தேட்டமுற்று மடைவர் நும் மகிமையினாற்
கருந்த ராதிபர் முகம்மது யூசுபு காரணரே (70)

செப்பு மரும்பறை முகப்பரு வங்குலஞ்சீரழிய
வுப்பு மிளகுங் கலந்திடுவாரிய லுறைகிணற்றிற்
கொப்பிடு மாண்பிற்கிணை யேயிலை ஞான்று மொண்ணிய லுமு
கப்புறு ஞான முகம்மது யூசுபு காரணரே (71)

சிந்தை மகிழ்ந்தொரு கொம்பீந்தது முஞ் செழிக்கு மட்டும்
விந்தை முஷாகிதாவில் விருமென்ன விளக்க முற்றாய்த்
தந்தை சொற்கிணை மந்திர மின்றன் றாதரித்துமனு
கந்தை யகற்று முகம்மது யூசுபு காரணரே (72)

சந்த சன்மான சம்மியத் துவத்தி னன்றாய்ப் பழகி
வந்த பின்லோக மோகமிகையா வகை தெளிந்தச்
சந்ததி யெண்மர் பெற்றீறாக மட்டு மண்டழைத்திடவு
கந்த திஞோதர் முகம்மது யூசுபு காரணரே (73)

வெட்டைப் புண் சூலை யறையாப்புக் கட்டிவெண் குட்டங்கருங்
குட்ட மகோதர முற்றுநும் வாயன்மயி லிறகு
பட்டவுடன் படும்பாச விமோசனமாங் கருணை
கட்டழ கோங்கு முகம்மது யூசுபு காரணரே (74)

ஊன்றிய கொம்பு தளீர் கொள்ளு மட்டு முண்மையினிற்
சான்று பலவுந் தகர்த்துச் சம்பூரண சாகரத்தில்
கான்று பதவியடைந்த காருண்ணிய நாயகரே
கான்றருங் கழன் முகம்மது யூசுபு காரணரே (75)

ஆக்க மிகுந்துள நுந்திருவாயலி லணியணியா
யூக்க மிருந்து வருநங்கனவான் றெகைக் கொப்பிலேயே
நோக்க மிகுந்த நர்க்குயர் பாதமீட்டியன் றேயகற்றிக்
காக்கத் தகுந்தநீர் முகம்மது யூசுபு காரணரே (76)

ஒக்க நிறைந்தியலுற்ற நும் வாயனுழைந்த நர்க்கும்
பூக்க நிறைந்த நறும்புகை நாசிற் புகுந்தவுட
னேக்க நிறைந்த மனதுன்ப மற்று வின்புறுவர்
காக்க நிறைந்தகண் முகம்மது யூசுபு காரணரே (77)

குணக்கற் றவருமருள் வாய்க்கு மென் றகுது குலிப்பாய்ப்
பிணக்கற்ற நுந்திருவாயலேப் பேணிவாய் பொத்தி நின்று
வுணக்கற்ற பாக்கியந் தாரீரெனக் கையுயர்த் திரப்போர்
கணக்கற்றவரே முகம்மது யூசுபு காரணரே (78)

பூவோடு கூடிய நாருமணம் பெறுமென் புதுமொழிபோல்
நோவோடு கூடியே நுந்திருவாயி னுழைந்த வுடன்
நாவோடு கூடிய செல்வமுங் கீர்த்தியு நங்குறுவர்
காவோடு கூடுநர் முகம்மது யூசுபு காரணரே (79)

புவிக்கு வருட்புரிஷாஹுல் ஹமீதொலிப் புத்திரராய்ச்
சவிக்கு நிகரற்ற பொற்பாத நம்பிய தன்மையநோய்
அவிக்குங் கருணைபுரிகவென் றேற்றுமிவ் வடியெஞ் சொல்லுங்
கவிக்கு துணைபுரி முகம்மது யூசுபு காரணரே (80)

தந்தை மறைந்த மூன்றுநாள் கபுறு சறிபிலஞ்சி
வந்து சலாம் பகர்ந்தீர் நற்பிரதியுடன் வருதீர்
சொந்த மகவே யிங்கிருமின் றுனியாமுடிவரையு
கந்துத் தரம்பெறு முகம்மது யூசுபு காரணரே (81)

வஞ்சமு மிஞ்சும் வறுமையும் போக்கி வகைபெறுவர்
தஞ்சமடைவர் நுந்திரு வாயலிற் றன்மையுளர்
நெஞ்ச மிரங்கி யருள்புரிவீர் நிகரற்றதிருக்
கஞ்சமலர்த்தாண் முகம்மது யூசுபு காரணரே (82)

அற்புத ஞானக் கடலே நிறையுண் ணருண் மலிந்த
பொற்பத நீதபுகழே யருந்தவப் பொக்கிஷமே
தற்பரனங் குற்றுலகோங்குந் திவ்ய தயாபரரே
கற்பகதீப முகம்மது யூசுபு காரணரே (83)

ஆரணங்காட்டி யருணலங்காட்டி யருந்தவத்திற்
பூரணங்காட்டி நேர்வழிகாட்டு மிப்புல்லனெற்குச்
சேரணம் காட்டி யதீதசன்மான சிறப்புடையீர்க்
காரணங் காட்டு முகம்மது யூசுபு காரணரே (84)

புவிக்கு வருட்புரி ஷாஹுல் ஹமிதொலிப் புத்திரராய்ச்
சவிக்குப் பொருவற்ற பொற்பாத முள்ளோயித் தன்மையநோய்
அவிக்குங் கருணைபுரிவீர்ப்பல் லோரறைகுதும்பற்
கவிக்குங் கணக்கில முகம்மது பூசுபு காரணரே (85)

நாணக்கடலிலதி துன்பப்பட்டு நலமிழந்துப்
பேணக்கடக்க வகையறி யாதுளம் பெரிதுழன்றேன்
மாணக்கிடைக்க வருட் ருவீர்மலர்ப் பாதமதைக்
காணக்கிடைக்கவு முகம்மது யூசுபு காரணரே (86)

அடருந்தவத்தெழில் ஷாஹுல்ஹமிதொலி யண்ணற்றிருப்
படரும்புகழிய பாலகரே யருட்பாங்குகுக்குஞ்
சுடரூரறநெறி தூங்குமனத் தினர்சொல்லு நவக்
கடலேகாருண்ணிய முகம்மது யூசுபு காரணரே (87)

பண்கொண்ட வேதர்பரவுஞ் சுபாதிபதி மவுனத்
திண்கொண்டசாதன போதவிநோதத் திருமதியே
மண்கொண்ட நும் மருண்வாயலடைந்தோர் மகத்துவமெங்
கண்கொண்ட செல்வ முகம்மது யூசுபு காரணரே (88)

நட்டுவதும்புகழ் நலம் பலமேன்மை கணம்பு நர்க்குக்
கொட்டுவதும்பிணி வஞ்சகஞ் சூனியக் கொடுமிடியை
வெட்டுவதும் பொல்லாப் பிசாசினமாவையும் வினைபகலக்
கட்டுவதுங்கதம் முகம்மது யூசுபு காரணரே (89)

தனங்கொண்ட நுந்திருச்சன்னிதி நாடித் தகுதிமிகுஞ்
சனங்கொண்ட மன்னர்கள் வந்தொழுவார் சஞ்சலமகல
மனங்கொண்டனர் சுகம்வாய்ப்பர் வருசை வளருநிதங்
கனங்கொண்டபாத முகம்மது யூசுபு காரணரே (90)

யாராரிருப்பினு மிறப்பினுஞ் செல்வ மிபாதுளினும்
நீராவதன்று நுஞ் சந்நிதினின்று நிதம்பணிந்தாற்
பேராவதொன்று பெட்பொன்று நட்பொன்று பிறங்குமதி
காராவதொன்றுமெய் முகம்மது பூசுபு காரணரே (91)

மருந்தென்ன மாய மந்திரமென்ன செல்வ மலைபோலேகுவிந்
திருந்தென்ன வாகுநும் வாயற் கழுகுநீ ரிணையினிவா
யருந்தென்ன வாகுமெய் யாகாதனவெல்லா மாகுமென்ப
கருந்தென் னுகூர்வாழ் முகம்மது யூசுபு காரணரே (92)

மெய்களு மேன்மையு மேதகையும்பல வித்தகமுந்
துய்களு மோங்குமின்னுந் திருவாயலிற் றாய்ந்தளிக்கு
நெய்களுஞ் சக்கரைப்பூச் சந்தனங்கட்கு நீட்டவராக்
கைகளுக் கென்பலன் முகம்மதுயூசுபு காரணரே (93)

கோனென்ன போற்றுபு ஷாஹுல் ஹமிதொலிக் கொண்மகவே
வானென்ன துன்னுநுஞ் செந்தாளருளியென் வறுமையற
ஏனின்னந் தாமசமிறையே யெளியெற்கிது தருணம்
கானென்ன மின்னு முகம்மது யூசுபு காரணரே (94)

சீர்கொள்ளு நுந்திருவாயன் முன்வந்துத் தினம்பணிவோர்
பேர்கொள்ளு வருளாகந்த பாக்கியம் பெட்புடனன்
னேர்கொள்ளுவர் மிடியாவுமடிந்து நிறைபெறுவர்
கார்கொள்ளும் வள்ளன் முகம்மது யூசுபு காரணரே (95)

வேதர் தொழுநபி நாயகர்பேரர் கமிதொலிவே
ணீதர் புகழ்மகவே நவநீதமெய் நித்திலமே
பாதந்த ரவிதுவேளை யிப்பாவி பலன்பெறப்பெட்
காதலகற்றுவீர் முகம்மது யூசுபு காரணரே (96)

எங்கு நிறையிறையோனருட் பெற்றினி தாய்விளங்கிப்
பொங்குநுங் கோத்திரர் பாத்திரமேவிப் பொலியுநதுயர்
மங்குறச் செய்யுஞ் சாயுட்ச விரட்சக மாண்புலவுங்
கங்குணி கர்கர முகம்மது யூசுபு காரணரே (97)

அஞ்சிநும் பாதவருட் பெறநாடி னரன்பு வெள்ளம்
மிஞ்சிநுஞ் சந்நிதில் வந்து வினைபலவு முரைத்துக்
கெஞ்சு மவர்திருத் தஞ்சமடைவர் நற்கீர்த்தி செழுங்
கஞ்ச மலர்ப்பத முகம்மது யூசுபு காரணரே (98)

ஆரா ரிருப்பினு மாதரித் தெற்கு வருள்புரிதல்
நீராகு வரன்று நித்தமுங் கெஞ்சியே நிற்கு மெனைப்
பாரா திருப்பது ஞாயமன் றன்று பரிந்து முகம்
காராருகுக்கு முகம்மது யூசுபு காரணரே (99)

ஆணிக்கை மேவி யரும்புகழ் மாண்பி னமுகிலங்கும்
மாணிக்க வாயலில் வந்தென் மனதிலுளக் குறைகட்
பேணிக்கை கட்டியுரைத் தெழிற்பாதம் பெரிதாகந்து
காணிக்கை யாயினேன் முகம்மது யூசுபு காரணரே (முற்றும்) (100)

பிஸ்மில்லாஹி.

## இந்நூலை யச்சிட் டரங்கேற்றியவரைப்பற்றி
# ஹக்கிடத்திற் கேட்குந் துஆ.

ஆசிரியப்பா.

ஆதியே ஞான வருளே நிராமயச்
சோதியே தூயச் சுடரே மனோதய
நித்திய பொருளே நிர்மலா அநந்த
சத்திய மாகித் தன்னிற் றானாய்
ஒருத்தனா யுலகிற் கருத்த னான
யாகறீம் யாஅல்லாஹ் யாறஹீம் யாலத்தீப்
நின்னைப் பலதினு நின்னிற் பலதையுந்
தரிசித் தோன்மேற் பரிசுத்த மானவர்
ஒலிமார் புகழு முண்மையே நிறைந்தவர்
பொலியு மான்மியப் பொக்கிஷ மானவர்
ஆரிபு பில்லாஃ சீரிய தவத்தினர்
சாதாத் முகம்மது யூசுபு சாகிபு
போதகர் மேலே புகழ்ப்பா வாக
வுரைத்த விவ்யூ சுயிய்யா மாலையைத்
தரைத்தலம் புகழ்கத் தனஞ்செல விட்டு
அச்சிட் டினிவா யரங்கேற் றினன்மெய்
முச்சகம் போற்று மூதறி வுடையோன்
செல்வமும் ஞான சிறப்புந் தகுதியுங்
கல்வியு மிக்குங் காருண்ணிய சீலன்
பக்கீர் சராங்கு பண்புகு மைந்தன்
ஹக்கினி லோர்மை எக்கீ னுடையான்
ஈகையிற் சிறந்த வாகைய னங்குறுங்
கட்டழ கோங்குபு கலைபலநாக
பட்டணம் வாழும் பண்பிற் சிறந்துற
வாகு மிகுந்த சேகு சராங்கு
நல்ல குணமு நடுவுந் தியாளமுஞ்
சொல்லழ குடனே தூய்மையுஞ் சொகுசும்
புத்திர சம்பத்தும் பொருள் பாக்கியமும்
நித்திய மருள்வாய் நேர்மையாய் நிலைக்கப்
பூரணமா யெவற் றுள்ளுந்
காரண மான கபூருர் றஹீமே.

இந்நூலை அச்சிடுவித்தருளிய காருண்ணிய சீலனுந் தயாளகுணச்
செல்வனும், மஜூரக்கம்பனி கன்ட்ராக்டருமாகிய,
சேகு சராங்கைப்பற்றிக் கேட்குந் "துஆ"

## பதிகம், விருத்தம்.

செல்வமுமான சிறப்புந் தகுதியுஞ் சீரருளுங்
கல்வியுமிக்குறும் பக்கீர் சராங்குதன் கண்மணியாய்ப்
பல்வளமேவுநன் னுகைவாழ் சேகுபற் பலனடைய
நல்லருட்செய்யு முகம்மது யூசுபு நவமணியே

தச்சன்றுயர்பிணி தகர்த் தருட்செய்யுஞ் ஷாகமிதொலித்தன்
பச்சமிகு நவமகவே நம்நூலைப் பரிந்துலகில்
அச்சிட்டருளிய சேகுக்கினிய வருள்புரிவீர்
முச்சகம்போற்று முகம்மது யூசுபு காரணரே

ஆலம்புகழிறை தூத ருகந்த வரியமகட்
பாலர்வழியாய் வருஞ் ஷாஹமிதொலிப் பாலகரே
சீலமிகுறும் பொற்பாதமேற்றுஞ் சேகுக்கனு
கூலம்புரிவீர் முகம்மது யூசுபு கோமணியே

ஹக்கை ஷரீஹத்துசெய்தன்பா லாநந்தகடற்குளித்துத்
துக்கை யகற்றிய மெய்ஞ்ஞான தீபமே துணைகதத்தைத்
தக்கை புகழ்மிகுஞ் சேகுக்கருளித் தயையுடனே
சக்கை யகற்றுமின் முகம்மது யூசுபு தயாநிதியே

வேதாந்த சூட்சவிநோத காருண்ணிய வித்தகரே
நாதாந்தமோன நடுவடைந்தோய் நும்மைநம்பி நிதம்
ஆதாரந்தேடுஞ் சேகுக்கரிய வருட்புரிந்துப்
பாதாரமீயு முகம்மது யூசுபு பாக்கியரே

சீராருஞ் செல்வக்கடல் ஷாஹமிதொலித் திருமகவாய்ப்
பேராருங் கீர்த்தியுள்மாண்பரசே பிரதியுள்ளக்
காராரும்பாதத் துணையானசேகுக் கருணைசெய்யுந்
தேராருஞ்ஞான முகம்மது யூசுபு சிகாமணியே

சிந்தாத வாழ்வுஞ் சிறப்புந் தகுதியுந் திருத்தவமுஞ்
சந்தான விர்த்தியு மீகையுமிக்க தழைத்திலங்கக்
கந்தமலர்ப்பத நம்புமெய் சேகுக் கனம்படைக்க
பிந்தாமற்காரு முகம்மது யூசுபு பேருளே

வந்தாரை யாதரித் தன்பூட்டிக்காக்கு நன்வாய்மையுமெஞ்
சந்ததியர் புகழ்சேகு சராங்குத் தகுதிபெறத்
தந்தாதரிப்பீர் நுஞ் செந்தாமைமகிமைநற் சாகரமே
அந்தாணர் போற்று முகம்மது யூசுபு ஆரணரே

காதங் கமழ்திருக் கஸ்தூரிவாசர் ஹமீபிறகுல்
போதமிகு நவப்பேரர் ஹமிதொவிப் புத்திரரே
நீதமிகுந்தவ சேகுசராங்கு நன்னிலமைபெறச்
சீதக்கதமருண் முகம்மது யூசுபு சிரோமணியே

வானர்பணி ஷாஹமிதொலி நாயகர் மைந்தர்முழுந்
தீனர்பணியும் புகழுளீர்சேகு தினஞ்சிறந்து
மானமுந் தானதருமந் தழைத்து மகிமையுற
வீனமகற்றுமின் முகம்மது யூசுபு விறையொலியே

முற்றிற்று.

## பரிசோதனை.

சிறப்புப்பாயிரம், iv நான்காவது பக்கம், 2-வது வரியில் "முறைபாற்" என்பதை "மிறைபாற்" என்றும், நூல், 2-வது பக்கம், 10 வது பாட்டினது 1-வது வரியில், "கெடுங்" என்பதை "கெடு" என்றும், 6-வது பக்கம் 37-வது பாட்டினது 3 வது வரியில் "னலகாற்" என்பதை "அலகாற்" என்றும் திருத்தி வாசித்துக்கொள்க.

பார்வைக்குமீறித் தோன்றும் பிறவச்சுப் பிழைகளையும், ஏற்குமாறு திருத்தி வாசித்துக்கொள்ளல், கற்றுணர்ந்தப்வல்லுநர்க் குறிய கடனாகும்.